2020 மார்ச் 23]

ஏற்கெனவே சரியாக 9 மணி நேரம் மின்சாரம் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பகுதியை ஆய்வு செய்து, அவரது கோரிக்கை கொள்கை முடிவிற்குட்பட்டது என்பதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்தாலோசித்து முடிவெடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா வரிசை எண் 158, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

158—

இணைப்புச் சாலை

***8605—திரு. வி. ராதாகிருஷ்ணன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, இளந்தோப்பு ஊராட்சி, திருக்குறகாவல் காலனி தெருவிலிருந்து சோழியங்கோட்டகம் சாலை வரை இணைப்புச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை தொகுதி, இளந்தோப்பு ஊராட்சியில், திருக்குறகாவல் காலனி முதல் சோழியங்கோட்டகம் சாலை வரையிலான இணைப்புச் சாலை, நடப்பு நிதியாண்டில் தார்ச் சாலையாக மாற்றியமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. வி. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மாவின் வழியில் நல்லாட்சி நடத்தி, மாநிலத்திற்கான 'நல் ஆளுமை' விருதினை முதன்முதலாக தமிழகத்திற்குப் பெற்றுத் தந்த இரண்டாம் கரிகால்சோழன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. மயிலாடுதுறை தொகுதியிலுள்ள வள்ளலகரம் ஊராட்சி, சீர்காழி மெயின் ரோடு முதல் வெங்கடேஸ்வரா நகர், Telecom Nagar வழியாக ஆனந்ததாண்டவபுரம் மெயின்ரோடு வரையிலான 3.5 கி.மீ. இணைப்புச் சாலையையும், மயிலாடுதுறை rural காளிகாம்பாள் கோயில் தெரு வரையிலான 1 கி.மீ. இணைப்புச் சாலையையும், அழிச்சிகுடி முதல் மயிலாடுதுறை rural வரையிலான 1.5 கி.மீ. இணைப்புச் சாலையையும், மல்லியம் முதல் அசிக்காடு வரையிலான 2 கி.மீ. இணைப்புச் சாலையையும், பூதங்குடி முதல் நெய்வாசல் வரையிலான இணைப்புச் சாலையையும் கடந்த கூட்டத்தொடரின்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதிமொழி கொடுத்தவாறு இந்தக் கூட்டத்தொடரின்போதே அமைத்துத் தர முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றியம், இளந்தோப்பு ஊராட்சியில் திருக்குறகாவல் காலனி முதல் சோழியங்கோட்டகம் வரையுள்ள சாலையின் நீளம் மொத்தம் 300 மீட்டராகும். இச்சாலை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், 2018–2019 ஆம் நிதியாண்டில் ரூபாய் 5 இலட்சத்து 41 ஆயிரம் மதிப்பீட்டில் ஓரடுக்கு கப்பிச் சாலையாக மேம்படுத்தப்பட்டது. இச்சாலை நடப்பு

2020 மார்ச் 23]

நிதியாண்டில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதித் திட்டத்திலிருந்து 7 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தார்ச் சாலையாக மேம்பாடு செய்யப்படும். இச்சாலைப் பணி இந்த ஆண்டே செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்தபோது 5 ஆண்டு காலத்திலே கிட்டத்தட்ட 65,134 கிலோ மீட்டர் நீள சாலைகள் மேம்படுத்தப்பட்டிருக்கின்றன. அதேபோல, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் காலத்திலே 56,925 கிலோ மீட்டர் நீள சாலைகள் இன்றைக்கு சென்னை மாநகராட்சி, நகராட்சி நிருவாகம், பேரூராட்சி, ஊரக வளர்ச்சித் துறை மூலமாக மேம்படுத்தப்பட்டிருக்கின்றன. ஒரு கிலோ மீட்டர் நீளமுள்ள சாலையாக இருந்தாலும் அதையும் சேர்த்து இன்றைக்கு அதிகமான சாலைகள் போடப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொண்டு, கண்டிப்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சாலைகளெல்லாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. வி. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா வரிசை எண் 159, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

159—

சட்டக் கல்லூரி

***13568—திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டத்தில் சட்டக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?